# மெய்யாகவே விடுதலையாவீர்கள். யோவா 8 : 37

விடுதலையில்லாமல் தவிக்கும் என் அன்பு சகோதரியே, சகோதரனே, பெரியோர்களே, சிறியோர்களே,

**மெய்யாகவே விடுதலையாவீர்கள்.**

**ஏசாயா 61 : 1 சொல்கிறதை வாசியுங்கள் :** சிறைபட்டவர்களுக்கு விடுதலையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் ஆடையைக் கொடுக்கவும் கர்த்தர் என்னை அனுப்பினார்.

சிறைபட்டு போன என் அன்பரே,

உங்களை விடுதலையாக்குவதற்காகவே தேவனுடைய வசனம் கடந்து வருகிறது.

**நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன ?**

**லூாக்கா 7:37 சொல்கிறது.**

விடுதலை பண்ணுங்கள். அப்பொழுது, நீங்களும் விடுதலைப் பண்ணப் படுவீர்கள்என்பதாக

ஆதலால், இந்த மாதத்திலே கர்த்தருக்குள் ஒரு தீர்மானம் செய்யுங்கள். அதாவது, ''நான் இன்னொருவரை'' விடுதலை பண்ணுவேன்''–என்பதாக.

நீங்கள் எந்த காரியத்தில் விடுதலை இல்லாமல் இருக்கிறீர்கள் ?–என்பதை ஆராய்ந்து பாருங்கள்.

பின்பு, இதைப் போல, மற்றவர்கள் யாராவது உங்களுக்குத் தெரிந்தவர்கள் விடுதலை இல்லாமல் இருந்தால் அதையும் ஆராய்ந்து பாருங்கள். உங்கள் நெருக்கத்தின் மத்தியிலும், உங்களுக்குத் தெரிந்தவர்களின் நெருக்கத்தை, மனப்பூர்வமாக, விடுதலை செய்து கொடுங்கள். தேவன் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பை பாருங்கள்.

**ஏனெனில் வேதம் சொல்கிறது.**

கொடுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும், எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும அளக்கப்படும். ஆனாலும், பாவ வாழ்க்கையில் விடுதலை இல்லாமல் தவிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, வேதம் சொல்வதை கவனமாய் கேளுங்கள்.

**யோவான் 8 : 32 சொல்கிறது** குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள், **சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** – என்பதாக.

ஆதலால், குமாரன் உங்களை விடுதலை செய்யும்படியாக, சத்தியத்திற்கு செவிகொடுக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

**அப்படியானால்,**

1. பாவத்திலிருந்து விடுதலையாக, சத்தியத்திற்கு செவிகொடுங்கள்
2. இதர காரியங்களில் விடுதலைபெற, மற்றவர்களை விடுதலை பண்ணுங்கள்.

சத்தியத்தை அறிந்து, மற்றவர்களுக்கு அறிவிப்பதில் முந்திக் கொள்ளுங்கள். நீங்கள் கொடுக்கும் தேவனுடைய வார்த்தை, ஒரு ஆத்துமாவை ஆறுதல் படுத்துகிறது. அவர்கள் ஆறுதல் அடைய, அடைய நீங்கள் தேற்றப்படுவீர்கள்.

உங்கள் சிறையிருப்பு கடனா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு கவலையா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு வேலையில்லா திண்டாட்டமா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு சிக்கலா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு ஏமாற்றமா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு வஞ்சிக்கப்பட்டீர்களா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு தோல்வியா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு பில்லி சூனியமா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு மன சஞ்சலமா ?<br>
அல்லது உங்கள் சிறையிருப்பு குழந்தை இல்லாமையா ?

**மெய்யாகவே விடுதலையாவீர்கள்**

**''விடுதலை பண்ணுங்கள்**

**அப்பொழுது நீங்களும் விடுதலைப் பண்ணப்படுவீர்கள்.**

**விசுவாசத்தோடே பாடுங்கள்.**

விடுதலை முழங்கிடுவோமே விக்கினம் யாவுமகலும்<br>
இடுக்கண்கள் சூழ்ந்திடும் வேளை இரட்சகர் மீட்பருள்வாரே<br>
நுகங்கள் முறிந்திடும் கட்டுகளறுந்திடும்.<br>
விடுதலைப் பெருவிழா காண்போம்<br>
ஆனந்த துதி ஒலி கேட்கும் . . . ஆண்டவர் வாக்கு பலிக்கும்.